**செ.வெ.எண்: 549** **நாள்: 27.09.2021**

**புதுக்கோட்டை மாவட்டத்தில்**

**உலக சுற்றுலா தின சிறப்புக் கருத்தரங்கம்**

**மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.கவிதா ராமு, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.**

---

புதுக்கோட்டை ஆயுதப்படை திருமண மண்டபத்தில் சுற்றுலாத்துறையின் சார்பில் உலக சுற்றுலா தின சிறப்புக் கருத்தரங்கம் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.கவிதா ராமு, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (27.09.2021) நடைபெற்றது.

மாவட்ட வருவாய் அலுவலர் திரு.பெ.வே.சரவணன் அவர்கள் கருத்தரங்கை தொடங்கி வைத்து பேசினார்.

இக்கருத்தரங்கில் புதுக்கோட்டையில் பெருங்கற்கால சின்னங்கள் என்ற தலைப்பில் காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழக பேராசிரியர் சு.ராஜவேலு அவர்களும், புதுக்கோட்டை வரலாற்றில் மத நல்லிணக்கச் சான்றுகள் என்ற தலைப்பில் முன்னாள் அருங்காட்சியகத்துறை உதவி இயக்குநர் முனைவர் ஜெ.ராஜா முகமது அவர்களும், புதுக்கோட்டை மாவட்ட குடைவரைக்கோவில்கள் என்ற தலைப்பில் தொல்லியல் ஆய்வுக்கழகத் தலைவர் கரு.இராஜேந்திரன் அவர்களும், புதுக்கோட்டையில் கோட்டைகள் என்ற தலைப்பில் தஞ்சாவூர் தமிழ்பல்கலைக்கழக முனைவர் பட்ட ஆய்வாளர் ஆ.மணிகண்டன் ஆகியோர் கருத்துரையாற்றினார்கள்.

இந்நிகழ்வில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் ஜி.கருப்பசாமி, வருவாய் கோட்டாட்சியர்கள் அபிநயா, தண்டாயுதபாணி, சொர்ணராஜ், மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் சா.சத்தியமூர்த்தி, இணை இயக்குநர் (ஊரக நலப்பணிகள்) மரு.இராமு, மாவட்ட சமூக நல அலுவலர் ரேணுகா, வட்டாட்சியர் செந்தில்குமார், அருங்காட்சியக காப்பாட்சியர் (கூ.பொ) டி.பக்கிரிசாமி மற்றும் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

மாவட்ட சுற்றுலா அலுவலர் நெல்சன் அவர்கள் நன்றி கூறினார்.

முன்னதாக மாவட்ட சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை சார்பில் மகளிர் சுயஉதவிக் குழுக்களின் உற்பத்தி பொருட்களின் கண்காட்சி அரங்குகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.கவிதா ராமு, இ.ஆ.ப., அவர்கள் பார்வையிட்டார்கள்.

பின்னர் புதுக்கோட்டை புதிய பேருந்துநிலையத்தில் நகராட்சி சார்பில் உலக சுற்றுலா தினத்தையொட்டி பலூான் பறக்கவிடும் நிகழ்ச்சியை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் துவக்கி வைத்தார்.

இந்நிகழ்வில் மாவட்ட வருவாய் அலுவலர் பெ.வே.சரவணன், நகராட்சி ஆணையர் நாகராஜன், வட்டாட்சியர் செந்தில்குமார் மற்றும் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

---

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், புதுக்கோட்டை.**